

முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள், தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு நலத்திட்டங்களை யும், குறிப்பாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் செயல் படுத்தப்பட்டு வரும் மக்களைத் தேடி மருத்துவம், நலம் காக்கும் ஸ்டாலின் போன்ற திட்டங்களை பாராட்டி அவ்வப்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதி வருவதை யடுத்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.09.2025) முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்களின் மருத்துவ மனைக்கு நேரில் சென்று சந்தித்துப் பேசினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (24.09.2025) முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பாலாஜி தனது பிறந்தநாளையொட்டி மனைவியுடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.9.2025) பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரங்கசாயி தெருவில் உள்ள மேயர் முனுசாமி விளையாட்டு திடலில் பல்வேறு வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட மைதானத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.9.2025) பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரங்கசாயி தெருவில் 3 கோடியே 96 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சென்னை நடுநிலைப் பள்ளிக் கட்டடத்தை திறந்து வைத்தார். திறந்து வைத்து, மாணவ, மாணவியர்களுடன் உரையாடினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.9.2025) கொளத்தூர், ஜவஹர் நகரில் அமைந்துள்ள கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்களையும், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.9.2025) கொளத்தூர், ஜவஹர் நகரில் அமைந்துள்ள கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்களையும், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.9.2025) பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரங்கசாயி தெருவில் 3 கோடியே 96 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சென்னை நடுநிலைப் பள்ளிக் கட்டடத்தை திறந்து வைத்தார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.9.2025) பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் சோமையா தெருவில் 3 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சென்னை உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்தை திறந்து வைத்து, மாணவ, மாணவியர்களுடன் உரையாடினார்.